பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 30 வியாழக்கிழமை 13.05.2021 கதிர் 189

**இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன் உடல் அளவில் நலிவுற்றுள்ளார். வயது மூப்புக் காரணம். அதனாலும் கொரோனாத் தொற்று அச்சம் காரணமாகவும் நாடாளுமன்றுக்கு அவர் வருகை தருவது மிகவும் குறைவு.

பக்கம்02

# 3 நாள்களுக்கு நாடு முடக்கம்

## முழு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுல்



கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் காரணமாக நாட்டில் இன்றிரவு முதல் மூன்று நாள்களுக்கு முழு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத் தப்படுகின்றது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்தார்.

☞2

## அடையாள அட்டையின் இறுதி இலக்க அடிப்படையிலேயே வெளியே வரலாம்

### பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

பயணக் கட்டுப்பாடுகள் இல்லாத சந்தர்ப்பங்களில் பொது மக்கள் தமது தேசிய அடையாள அட்டையின் கடைசி எண்ணின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைகளுக்காக வீடுகளை விட்டு வெளியேற அனுமதிக் கப்படுவார்கள் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இலங்கையில்

☞2

## அதிகரிக்கும் தொற்றாளர்கள்; நேற்றும் 2,386 பேர் அடையாளம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. நேற்றும் 2 ஆயிரத்து 386 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 484 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 657 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 24 ஆயிரத்து 977 பேர் வைத்தியசாலை

☞2

## குடாநாட்டில் மேலும் 67 பேர் கொரோனாவுக்கு இலக்கு!

### வடக்கில் நேற்று 82 பேருக்குத் தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 67 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 82 பேருக்குக் கொரோ னா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக ஆய்வு கூடம் என்பவற்றில் 977

☞2

## வவுனியா வளாக மாணவர்கள் 31 பேருக்குக் கொரோனா உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ள யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தைச் சேர்ந்த மேலும் 31 மாணவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனையில் நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வளாக மாணவர்கள் சிலருக்குக் கடந்த சில நாள்களாகக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. இதையடுத்து அவர்களுடன் தொடர்புடைய மாணவர்களிடம் நேற்று அன்டிஜன்

☞2

## தமிழகத்திலிருந்து நால்வர் படகில் குருநகர் வந்தனர்!

### பொலிஸாரினால் நேற்றுக் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே12

தமிழ்நாடு ஈரோடு மாவட்டம் அரிச்சலூர் முகாமில் வசித்து வந்த தாய், மகள், 2 பேரப்பிள்ளைகள் என 4 பேர் படகு மூலம் தாயகம் வந்து சேர்ந்துள்ளனர் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பி. சகாயராணி (வயது 60) (அ.அ.எண் 1719), இவரது மகள் மேரி லவுரா (வயது 35) (அ.அ.எண் 1917), இவரது பிள்ளைகள் கௌரி யல்றிசாந்த்(வயது 9),டிலான் லியோனட் (வயது7)

☞2

## கொரோனாத் தொற்றின் உக்கிரத்தால்

## வடக்கில் பல பாடசாலைகள் சிகிச்சை மையங்களாக மாற்றம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் பல பாடசாலைகள் கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றும் பணி முன்னெடுக்கப்படுகின்றது

இதற்கமைய வவுனியா மாவட்டத்தில் மூன்று முறிப்பிலுள்ள தமிழ் மற்றும் சிங்களப் பாடசாலைகள், ஓமந்தைப் பாடசாலை ஆகியவற்றுடன் யாழ். மாவட்டத்தில் நாரந்தனை றோ.க. பாடசாலை என பன முதல் கட்டமாக கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப்படுகின்றன.

இதேவேளை, வடக்கில் மேலும் பல பாடசாலைகள் கொ ரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## விபத்தில் ஒருவர் பலி; 2 பேர் காயம்

மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிக் குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பெரிய கல்லாறிலிருந்து மட்டக்களப்புக்குப் பயணித்த ஓட்டோவுடன் கல்முனையிலிருந்து மட்டக்களப்புக்குப் பயணித்த பஸ் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

☞2

## யாழ்ப்பாணத்தில் 50 பேர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்.குடாநாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 50 பேர் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவருக்கும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று யாழ். தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாதோர், சமூக இடைவெளியைப்

☞2

## கிழக்கு ஆளுநருக்கும் கொரோனா

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்துக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தன்னிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையில் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநர் நேற்று தெரிவித்தார்.

கடந்த 14 நாள்களில் தன்னுடன் நேரில் சந்தித்தவர்களை உடனடியாக சுயதனிமைப்படுத்திக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.




## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த வாரம் நாடாளுமன்றம் கூடும் போது ஒரு நாள் சபைக்கு வந்து வரவுப் புத்தகத்தில் அவர் ஒப்பமிட்டுச் செல்ல வேண்டும். இல்லையேல் அவரின் சுகவீனம் மற்றும் உடல் நலிவைக் காரணம் காட்டி லீவு அங்கீகாரத்துக்கான கடிதம் ஒன்றை சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும். சபாநாயகர் அதை சபையில் முன்வைத்து சபையின் அனுமதியைப் பெற்றால் சம்பந்தருக்குச் சிக்கல் இல்லை. அப்படி இல்லையாயின் தொடர்ந்து மூன்று மாதங்கள் சபைக்கு வரவில்லை என்ற அடிப்படையில் அவர் பதவி இழக்க வேண்டி நேரும்.

என்ன செய்யப் போகின்றார் சம்பந்தன்? அடுத்த வாரத்தில் விவரம் தெரிய வரும்.

* * *

தமிழ்க் கட்சிகளை பொதுவேலைத் திட்டம் ஒன்றின் கீழ் ஒன்றிணைத்துக் காரியங்களை முன்னெடுக்க வைக்கும் முயற்சியை லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'தமிழ்த் தகவல் மையம்' என்ற அமைப்பு ஆரம்பித்திருக்கின்றது.

முன்னர் வரதகுமாரை மையமாகக் கொண்டு இயங்கிய இந்த அமைப்பின் சத்தம் சந்தடி, வரதகுமாரின் மறைவுடன் இல்லாமலிருந்தது. இப்போது அந்த மையமும் புலம்பெயர் தேசங்களில் இயங்கும் நம்மவர்கள் சிலரும் சேர்ந்து இந்தப் புது முயற்சியை மும்முரமாக ஆரம்பித்திருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சேர்ந்த பல பிரமுகர்களையும், ஈ.பி.டி.பி. தரப்பையும் 'சூம்' மூலம் ஒன்றிணைத்துக் கலந்துரையாடுவது ஏற்பாட்டாளர்களின் நோக்கமாம்.

நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகலில் இந்தக் கலந்துரையாடலை நடத்தவது பூர்வாங்கத் திட்டம். அந்த நாளில் கூட்டம் நடைபெறுமா, கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் யாது என்பவை எனக்குத் தெரியவரவில்லை.

மலிந்தால் சந்தைக்கு வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

* * *

விவசாயத்திற்கு உர இரசாயனங்களை முற்றாகத் தவிர்ப்பது என்ற திடீர் அறிவிப்பை கோட்டா அரசு விடுத்தபோது பலரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். இது சாத்தியமானதா என்று இப்போதும் பலர் சந்தேகத்துடன் கேட்கின்றார்கள்.

உர இரசாயன இறக்குமதிக்கு பல்லாயிரம் கோடி டொலர்களை அந்நிய செலாவணியாக செலவிட வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் அரசு, அந்த நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாமல்தான் இப்படி அறிவிப்பு விடுத்ததோ என்ற சந்தேகம் பலருக்கு.

ஆனால், உர இறக்குமதி நிறுத்தப்பட்டால் விவசாயத்தில் பெரும் பாதிப்பு ஏற்படும். தரமான விளைபொருள் கிடைக்கும் என்றாலும், விளைச்சல் அளவு பல மடங்கு குறுகும். உற்பத்திப் பொருள்களின் விலை எக்கச்சக்கமாக எகிறும். உடனடிப் பாதிப்பும், நெருக்கடியும் நாடு முகம் கொடுக்க முடியாத தீவிரமாக இருக்கும். பெருந்திண்டாட்டம் நேரும்.

இவற்றையெல்லாம் சரியாகக் கணிப்பிடாமல் அவசரப்பட்டு கொள்கை ரீதியாக முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன. நிலைமையை அரசு எப்படிச் சமாளிக்கப்போகின்றதோ தெரியவில்லலை எனவும் அவை அங்கலாய்க்கின்றன.

இதற்கிடையில் இரசாயன உரம் பாவிக்காமல் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதைக் கண்காணித்து முன்கொண்டு செல்வதற்கான செயலணி ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார். வழமைபோல அந்தச் செயலணியின் தலைவராகவும் பஸில் ராஜபக்ஷவே நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியல் ரீதியாக பஸில் ராஜபக்ஷவின் செயற்பாடுகளுடன் ஒன்றிப் போகாத சில தரப்புகளும் அந்தச் செயலணியில் நியமிக்கப்பட்டுள்ளன.

செயலணியின் முதல் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அடுத்த நாளே திடுதிப்பென அமெரிக்கா புறப்பட்டு விட்டார் பஸில். அவர் நாடு திரும்பக் குறைந்தது ஒரு மாதமாவது செல்லும் என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள்.

நடந்து முடிந்த செயலணிக் கூட்டம் தான் பஸிலின் திடீர் அமெரிக்கப் பயணத்துக்குக் காரணமா? செயலணியின் முதல் கூட்டத்தில் நடந்தவை என்ன?

ஓரிரு தினங்களில் விவரங்கள் வெளியாகும் என நாம் எதிர்பார்க்கலாம்.

– மின்னல் –

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேணாதவர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய யாழ். தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரஷாத் பெர்னாண்டோவின் அறிவுறுத்தலில் விசேட நடவடிக்கை நேற்று யாழ். மாநகரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வீதிகளில் மட்டுமல்லாமல் நிறுவனங்கள், வியாபார நிலையங்களுக்குள் சென்ற பொலிஸார் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 50 பேரைக் கைது செய்து பஸ்ஸில் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்கள் 50 பேருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கான வழக்கு எதிர்வரும் ஜூலை 21,22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் அழைக்கப்படும் என்று பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டது.

## விபத்தில் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

இந்த விபத்தில் பெரியகல்லாறு பிரதான வீதியை சேர்ந்த ஓட்டோ சாரதியான அழகப்பர் மதிராஜ் (வயது 49) என்பவர் உயிரிழந்துள்ளார். அவரது சடலம், பிரேத பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸின் சாரதி, களுவாஞ்சிகுடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## 3 நாள்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கமைய இன்றிரவு 11 மணி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரையில் நாடு தழுவிய முழு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இக்காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படும் எனவும், மேல் மாகாணத்தில் செலுத்தப்படும் கொரோனாத் தடுப்பூசி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயாளிகள் அவசர தேவை நிமித்தம் வைத்தியசாலைகளுக்குச் செல்ல முடியும் எனவும், அதற்குப் பயணத் தடை பொருந்தாது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம், நேற்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரையிலான பயணத் தடை நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார்.

## வவுனியா வளாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பரிசோதனையில் மேலும் 31 மாணவர்களுக்குக் கொரானோத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (100)

## அதிகரிக்கும் தொற்றாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## தமிழகத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆகியோரே 10 ஆம் திகதி இரவு புறப்பட்டு, நேற்று முன்தினம் அதிகாலை யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை வந்தடைந்துள்ளனர் என்ற தகவல் தமிழகத்தில் கிடைக்கப்பெற்றுள்ளது.

மேரிலவ்ராவின் கணவர் அருள்தீபன் பிரான்சிஸ் இந்தியாவிலேயே உள்ளார். மேரி லவ்ரா ஏற்கனவே பிரான்ஸ் செல்வதற்கு சட்டவிரோதமாக கடவுச்சீட்டு தயார் செய்த முறைப்பாட்டில் இவரது கணவரின் தம்பி நிஷாந்தன் இன்னும் கொழும்புத் தூர் மத்திய சிறையில் உள்ளார்.

இந்த நிலைமையிலேயே இவர்கள் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர் எனத் தமிழகத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இத்தகவல்களை அடுத்து விசாரணைகளை ஆரம்பித்த யாழ்ப்பாணப் பொலிஸார் சம்பந்தப்பட்டோரைத் தேடி அடையாளம் கண்டு மடக்கியுள்ளனர் என நேற்றிரவு தெரிய வந்தது. இவர்கள் தனிமைப்படுத்தப்படுகின்றமையோடு இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## அடையாள அட்டையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் மாகாணங்களுக்கு இடையே பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, இன்றிரவு 11 மணி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரையில் நாடு தழுவிய முழு நேர பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, நேற்று முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை பயணத் தடை நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பயணக் கட்டுப்பாடுகள் இல்லாத சந்தர்ப்பங்களில் பொது மக்கள் தமது தேசிய அடையாள அட்டையின் கடைசி எண்ணின் அடிப்படையில் பொது இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படவுள்ளனர். இந்த நடைமுறை இன்று முதல் மே 31 வரை நடைமுறையில் இருக்கும் என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இதன்படி, தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் 0, 2, 4, 6, 8 ஆகிய இரட்டை எண்களைக் கொண்டவர்கள் 14, 16, 18, 20, 22, 24, 26, 28, 30 ஆகிய நாள்களில் பயணக் கட்டுப்பாடு இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

அதேபோன்று, தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் 1, 3, 5, 7, 9 ஆகிய ஒற்றை எண்களைக் கொண்டவர்கள் 13, 17, 19, 21, 23, 25, 27, 29, 31 ஆகிய நாட்களில் பயணக் கட்டுப்பாடு இல்லாத சந்தர்ப்பங்களில் மட்டும் வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியேறும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமது தேசிய அடையாள அட்டையை உடன் வைத்திருக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இல்லாத சந்தர்ப்பத்தில் மட்டுமே, அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

எனினும், இந்த அடையாள அட்டை முறைமையிலிருந்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமைகளுக்காகச் செல்பவர்களுக்கு விலக்களிக்கப்படும்.

அத்தியாவசிய தேவைகளின் நிமித்தம் வீட்டைவிட்டு வெளியேறுபவர்கள் கண்டிப்பாக இதனைக் கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## குடாநாட்டில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 67 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 3 பேரும், வவுனியா மாவட்டத்தில் 4 பேரும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலை தனிமைப்படுத்தல் பிரிவில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களின் முதல் நிலை தொடர்பாளர்கள் 5 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 2 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தருமபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 4 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட 29 பேருக்கும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 31 பேருக்கும், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 7 பேருக்கும் என 67 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 12 பேருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 9 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் நெல்லியடி சந்தைத் தொகுதி மற்றும் வெதுப்பகத்தில் அடையாளம் காணப்பட்டவர்களின் முதல்நிலைத் தொடர்பாளர்கள்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கும், தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கும், அச்சுவேலி, கோப்பாய் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்ட தலா ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த 10 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

சங்கானை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

## 18 தங்க பிஸ்கட்டுக்களுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கையர் 18 தங்க பிஸ்கட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் கட்டார் நாட்டில் இருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு தங்க பிஸ்கட்களைக் கொண்டு வந்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது. சந்தேக நபர் நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் தனது உடலில் மறைத்து வைத்து தங்க கட்டிகளைக் கொண்டு வந்துள்ளார் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் விவாதத்தை ஒத்திவைக்க வேண்டும்

### எதிர்க்கட்சி கோரிக்கை



கொழும்பு, மே 13

எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் தொடர்பான நாடாளுமன்ற விவாதம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மேலும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது எனக் கூறினார்.

இதேவேளை கொரோனாத் தொற்று விகிதம் அதிகரித்துவரும் நிலையில் தடுப்பூசி திட்டம் தொடர்பாக அரசாங்கம் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல கேட்டுக் கொண்டார்.



## டிஜிற்றல் தடுப்பூசி அடையாள அட்டை

இலங்கையில் டிஜிற்றல் தடுப்பூசி அடையாள அட்டை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த அடையாள அட்டைத் தடுப்பூசி திட்டத்தை சீராக செயற்படுத்த உறுதி செய்யும் என்று விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் டிஜிற்றல் அடையாள அட்டை உருவாக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அடையாள அட்டையில் தடுப்பூசி பெற்ற நபரின் விவரங்கள், தடுப்பூசியின் வகை, பயன்படுத்தப்பட்ட தடுப்பூசியின் விவரங்கள், வழங்கப்பட்ட திகதி மற்றும் இரண்டாவது ஜப் வரவிருக்கும் திகதி மற்றும் தடுப்பூசி செயன்முறை தொடர்பான ஏனைய தகவல்கள் இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.




## 71 ஆயிரத்து 203 பேருக்கு சினோபோர்ம் போடப்பட்டது

கடந்த செவ்வாய்க்கிழமை 50 ஆயிரத்து 493 பேருக்கு சீனாவின் சினோபோர்ம் கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இதுவரையில் 71ஆயிரத்து 203 பேருக்கு சினோபோர்ம் கொவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செலுத்தப்பட்ட எவருக்கும் இதுவரையில் பாரிய அளவான எவ்வித விளைவுகளும் பதிவாகவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசு மீதான நம்பிக்கையை பொதுமக்கள் இழந்துள்ளனர்

### கொரோனாவே காரணம் என்கிறார் அநுர

கொரோனாத் தொற்று தொடர்பாக அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தரவு மற்றும் தகவல்களில் இருந்த நம்பிக்கையைப் பொதுமக்கள் இழந்துவிட்டனர் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அந்தக் கட்சியின் தலைவர் அநுர குமாரதிசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

மேலும் கொரோனாக் கட்டுப்பாடு தொடர்பான பொறிமுறையில் சுகாதாரத் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றாலும், மற்றத் தரப்பினருக்கே அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கின்றது என குற்றம் சாட்டினார்.

எனவே கொரோனாத் தொற்றால் ஏற்படும் ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அநுர குமார திசாநாயக்க கேட்டுக் கொண்டார்.

அந்தவகையில் கொரோனாக் கட்டுப்பாட்டு செயலணி உடனடியாக மறுசீரமைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர், நாட்டில் பரவும் கொரோனாத் தொற்றுக்கு அரசாங்கத்தின் அலட்சியம் மற்றும் தவறான முடிவுகளே காரணம் என்றும் குறிப்பிட்டார்.



## தனிமைப்படுத்தல் மீறிய 435 பேர் கைது

நேற்று (புதன்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 435 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.



அதனடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் 8 ஆயிரத்து 299 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இன்று வரையான காலப்பகுதியிலேயே இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி நஷீட்டின் உடல்நலம் தொடர்பாக விசாரித்தார் பிரதமர்

குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்ற மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட்டின் உடல்நலம் தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ விசாரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) மொஹமட் நஷீட்டின் தந்தையான அப்துல் சதாருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய பிரதமர், நஷீட்டின் உடல்நலம் தொடர்பாக விசாரித்தமையுடன் அவர் விரைவில் குணமடைய வேண்டுமென்றும் பிரார்த்தித்துள்ளார்.

மேலும் மொஹமட் நஷீட் குணமடைவதற்கு ஏதேனும் உதவிகள் தேவைப்படின், அவை தொடர்பில் அறிவிக்குமாறும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி இரவு, மாலைதீவிலுள்ள அவரது வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த காரில் ஏறிக்



கொண்டிருந்த வேளையில் மொஹமட் நஷீட், குண்டு வெடிப்பிற்கு இலக்காகினார்.

குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த அவர், 16 மணிநேர சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு, தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸார் துப்பாக்கிச் சூடு ஊரு ஜுவா பலியாகினார்

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மெலேன் மபுலா எனும் ஊரு ஜுவா உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நவகமுவ பகுதியில் வைத்து குறித்த நபர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.



## ஷானியின் பிணை மனுவை விசாரிப்பதற்கு திகதி குறிப்பு

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை பிணையில் விடுவிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவை இம்மாதம் 19 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு கடந்த செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிபதிகளான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது, ஷானி அபேசேகர சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த மனு விசாரணைக்காக திகதி ஒன்றைக் கோரியிருந்தார்.

அதன்படி, குறித்த மனு எதிர்வரும் 19 ஆம் திகதி நிஷ்சங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர்.குருசிங்க ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

## போலி காசோலை மோசடி 4 சந்தேகநபர்கள் கைது

போலி காசோலைகளை அச்சிட்டு ரூபா 43 கோடி பணத்தை மோசடி செய்தார்கள் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் 4 சந்தேக நபர்கள் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியில் தொடர்புடைய மேலும் சில சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன், அவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் போலி காசோலைகளை அச்சிட்டு இவ்வாறான பண மோசடி மேற்கொள்ளப்பட்ட முதலாவது பண மோசடி இதுவாகும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆயர்கள் வழி செல்வோம்!

**ஈழத் தமிழர்களின் தேசிய ஆன்மாவில் ஆறாத – மிக ஆழமான – ரணத்தையும் வடுவையும் ஏற்படுத்திய நிகழ்வின் பன்னிரண்டாவது ஆண்டுப் பூர்த்தியை நாம் நெருங்கிக் கொண்டிருக்கின்றோம்.**

**தமிழர்களின் வரலாற்றில் பெரும் துயரத்தின் அடையாளம் ஊழிக் கூத்தாய்ப் பதிந்த இடங்கள் முள்ளிவாய்க்காலும் நந்திக்கடலும்தான். இந்த நூற்றாண்டின் மிகக் கோரமான இனப்படுகொலைக் குரூரத்தின் உச்சம் அரங்கேறிய மையம் அதுதான்.**

**தமிழினத்தின் ஆன்மாவையே அதிரவைத்த இறுதிக் கொடூரங்களின் மௌனமான சாட்சியம் முள்ளிவாய்க்காலே.**

**பல்லாயிரம் தமிழின மாண்பாளர்களின் உயிர் ஈகத்தில் கட்டமைக்கப்பட்டு வளர்க்கப்பட்ட விடுதலைப் போராட்டம் ஆயுதமுனையில் அடக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட இடம் அதுதான். எதிரி வெற்றி பெற்று, தமிழினம் தலை கவிழ்ந்த சோகம் அங்குதான் நிரந்தரமாகப் பிறந்தது.**

**அந்த சோகத்தின் பன்னிரண்டாம் வருட நினைவலைகளைச் சுமக்கும் வாரத்தின் ஆரம்பத்தில் நிற்கின்றோம்.**

**அன்று அப்பாவிப் பொதுமக்களின் பேரழிவு பற்றிக் கூடச் சிந்திக்காமல் பேயுருக் கொண்டிருந்த அதே ஆட்சிப்பீடம் அதே உணர்வு வெறியுடன் இப்போது ஆர்ப்பரித்து நிற்கின்றது.**

**வெறித்தனமாகக் கொன்றொழிக்கப்பட்ட – பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட – இனவெறியாட்டத்தில் களப்பலியாகி விட்ட – தங்களின் இரத்த உறவுகளை அவர்கள் மரணித்த பூமியில் அல்லது காணாமலாக்கப்பட்ட இடத்தில் அல்லது பலிகொடுக்கப்பட்ட நிலத்தில் விளக்கேற்றி, அஞ்சலித்து, நினைவுகூரக் கூட இடமளிக்காத பேரினவாத வெறி தொடருகின்றது.**

**உறவுகளை இழந்த மக்களின் உள்மனக் குமுறல்களை புரியும் நன்நெஞ்சு ஆட்சியாளர்களிடம் இல்லை. பௌத்த – சிங்களப் பேரினவாத வெறி பஎன்ற மன விகாரத்துக்குள் சிக்கிக் கிடக்கும் சிங்களத்துக்கு தமிழர் தாயகத்தில் அடிமைப்பட்டு, அடக்கப்பட்டு, நலிந்து கிடக்கும் தமிழினத்தின் ஆன்மாவின் குரல் கேட்கப்போவதில்லை.**

**இந்த வாரத்தின் புனிதம் புரியப் போவதில்லை. ஓர் இனத்தின் விடுதலை வேள்வியை பயங்கரவாதமாகச் சித்திரிக்கும் மனவமைப்புக்குள் சிக்குண்டு கிடக்கின்ற பேரினவாதம், அந்த வெறியிலிருந்து மீண்டு வெளியே வரப்போவதில்லை.**

**உலக நாகரிகங்கள், மனிதத்துவப் பண்பியல்புகளில் இருந்து வேறுபட்ட – பேரினவாத வெறிகொண்ட – ஒரு சிந்தனையோட்டத்தில் பழக்கப்பட்டு விட்ட போக்கு அது.**

**மரணித்தவர் மகாத்மா காந்தியாக இருக்கலாம். அல்லது அவரைச் சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்ஸேயாக இருக்கலாம். யாராயினும் உயிரிழந்த பின்னர் அவரின் பூதவுடல் மரியாதைக்குரியது. அவமதிப்புக்குரியதன்று. அதனால்தான் சவஊர்வலம் ஒன்று நம்மைக் கடக்கும் போது உயிரிழந்தவர் யார் என்று தெரியாமலேயே நாம் எழுந்து நின்று மரியாதை செய்கிறோம்.**

**உயிரிழந்தவர்களை – அவர்களின் பூதவுடல்கள் – மரியாதைப் படுத்த வேண்டும் என்ற மனு நீதி – மனிதப் பண்பியல்பு – நாகரிகம் – பௌத்த, சிங்கள மன்னனான துட்டகைமுனுவுக்குக் கூட நன்கு தெரிந்திருந்தது.**

**அதனால்தான் தன்னுடனான போரில் உயிரிழந்த தமிழ் மன்னன் எல்லாளனுக்கு சமாதி அமைத்து, அதைத் தாண்டிச் செல்வோர் அந்த மன்னனுக்கு – அவனின் சமாதிக்கு – வீதியில் இறங்கி அஞ்சலித்து மரியாதை செய்ய வேண்டும் எனப் பணித்தான் அவன்.**

**இன்று சிங்களத்தின் ஆட்சிப் பீடத்தில் இருக்கும் நவீன துட்டகைமுனுகளுக்கு அந்தப் பண்பியல்பு கூட இருக்கவில்லை. மாவீரர்களின் வித்துடல்கள் புதைக்கப்பட்டிருந்த துயிலும் இல்லங்களைத் தேடித் தேடி புல்டோஸர் கொண்டு அழித்த சின்னத்தனத்தின் கதாநாயர்கள் இவர்கள். கௌதம புத்தன் அவர்களுக்குப் போதித்த பஞ்சசீலம் அதுதான்.**

**அத்தகையோரிடம் உறவுகளைத் தொலைத்தவர்கள் தங்களுக்கு நீதி கிட்டும் என்றோ, நியாயம் நிலை நிறுத்தப்படும் என்றோ எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.**

**கொடூர ஆட்சிப் பீடத்தின் அழுங்குப் பிடிக்குள் சிக்கியிருக்கும் தமிழினம் அதன் யதார்த்தப் புறநிலைகளைக் கருத்தில் கொண்டு – இயலுமை மற்றும் இயலாமையை கவனத்தில் எடுத்து – சூழ்நிலைக்கேற்ப தமது நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதுதான் பொருத்தமானதும் சரியானதுமாகும்.**


**வெறும் உணர்ச்சிப் போக்கில் – உரிமையின் நியாயத்தில் – தீர்மானங்களை எடுக்காமல் சாத்தியமானவற்றைச் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டும்.**

**தற்போது கொரோனாப் பெருந்தொற்று என்ற நெருக்கடியும் கழுத்தை நெருக்கி நிற்கின்றது.**

**இந்தப் பின்புலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எவ்வாறு அனுஷ்டிப்பது என்பதற்கு வடக்கு – கிழக்கு ஆயர் பேரவை துணிச்சலுடன் ஒரு வழிகாட்டுதலை முன்வைத்துள்ளது.**

**தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் தத்தமது விருப்புக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அமைய, புதிய, புதிய திட்டங்கள், நிகழ்ச்சி நிரல்களை அறிவித்து, மேலும் குழப்பத்தை ஏற்படுத்தாமல், ஆயர்களின் திட்டத்தை ஆதரித்து, இணங்கி ஒரு வழியில் செயற்படுவது நல்லது என்று கருதுகிறோம். அத்தரப்புகளுக்கு இக்கருத்து சமர்ப்பணம்.**

# குறைந்த வருமானம் பெறுவோர் தொடர்பில் பிரதமர் ஆலோசனை



குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் விசேட கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில் வைத்து தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கினார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் நடுத்தர வர்க்க மக்களுக்கென முன்மொழியப்பட்ட வீட்டுத்திட்டங்கள் மற்றும் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் பிரதமர் இதன்போது கவனம் செலுத்தினார்.

அந்தத் திட்டத்தை எவ்வித தாமதமுமின்றி துரிதமாக நிறைவுசெய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரதமர் துறை சார்ந்த அமைச்சர் என்ற ரீதியில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு ஆலோ சனை வழங்கினார்.

அத்துடன் பம்பலபிட்டிய மற்றும் நாரஹேன்பிட்டிய பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள முன்மொழியப்பட்ட வீட்டுத்திட்டங்களுக்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனங்களைத் தெளிவூட்டி பலருக்கு வீட்டு வசதிகள் உரித்தாகும் வகையில் செயற்படுத்துமாறும் பிரதமர் தெரிவித்தார்.

குறித்த சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த, பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, இராஜாங்க அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்தன, வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் டீ.ஏ.பியசேன வீரரத்ன, பிரதிப் பொது முகாமையாளர் கே.ஏ.ஜானக, சட்ட அதிகாரி டீ.எம். ஜயலத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தொழிற்திணைக்கள பிரிவுகளை தற்காலிகமாக மூடுவதற்கு முடிவு

தொழில் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மை கோரல் பிரிவுகளை தற்காலிகமாக மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று (புதன்கிழமை) மற்றும் இன்று (வியாழக்கிழமை) குறித்த பிரிவுகள் பொதுமக்களுக்காக மூடப்பட்டிருக்கும் என தொழில் ஆணையாளர் நாயகம் பி.கே.பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

கொவிட் – 19 இன் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

# கேரளக் கஞ்சாவுடன் நால்வர் கைதாகினர்



மட்டக்களப்பில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்டுவரும் ஒப்பந்தகாரர் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான வீதி அதிகாரசபை பெயரிடப்பட்ட பிக்கப் ரக வாகனத்தில் கஞ்சா கடத்திய சாரதி உட்பட கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட 4 பேரை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து கேரளா கஞ்சா மற்றும் பிக்கப் ரக வாகனம் ஒன்றையும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளோம் எனமாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி,கே பண்டார தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திருப்பொருந்துறை பகுதியில் சுற்றிவளைத்து சோதனையிட்டபோது 155 கிராம் கேரள கஞ்சாவுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்லடி மணிக்கூண்டு கோபுரத்துக்கு அருகில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரைக் கைதுசெய்ததுடன் அவரிடத்தில் இருந்து 3 ஆயிரத்து 100 மில்லி கிராம் கேரளா கஞ்சாவை மீட்டதுடன் கல்லடி திருச்செந்தூர் பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 73 கிராம் கஞ்சாவை மீட்டனர்.

அதேவேளை, மட்டக்களப்பு திருகோணமலை வீதி வைச்சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் கஞ்சாவை எடுத்து வந்த ஊறணியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து 3 ஆயிரத்து 220 மில்லிக்கிராம் கேரளக் கஞ்சாவை மீட்டுள்ளனர்.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பெலியத்த - பெதிகம இடையில் விபத்து



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பெலியத்த மற்றும் பெதிகம பிரதேசங்களுக்கு இடையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறைப் பகுதியில் இருந்து வந்த வான் ஒன்று வீதியில் பராமரிப்புப் பணியில் இருந்த வீதி அபி விருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான டிப்பர் வாகனத்தில் மோதுண்டதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, வானில் பயணித்த மூவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும் ஏனைய இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் தங்காலை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கராபிட்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். விபத்து தொடர்பில் டிப்பர் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


குருந்தூர் மலையில் பௌத்த வழிபாடுகள்

> பரிசோதனைகள் தடையின்றி இரட்டிப்பான அளவில் இடம்பெறும் என்கின்றனர். ஆனால் மூத்த அதிகாரியிடம் கேட்டபோது ஒரே பதிலாக கூறுவதானால் பேச்சு பல்லக்கு தம்பி கால் நடை என்ற நிலைமை தான் காணப்படுகின்றது என்கின்றனர்.

# கொரோனாப் பரவலுக்கு பின்னால் சில சங்கதிகள்

**ந.லோகதயாளன்**

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் பெறப்பட்ட மாதிரிகளுக்கு 7 தினங்களின் பின்பு பெறுபேறு வழங்கப்பட்டது. அதில் 7 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் எவரைத் தவறு சொல்வது?

5ஆம் திகதி பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கியவர்கள் 11 ஆம் திகதி வரையில் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். இதேபோன்று பெறுபேறு 11ஆம் திகதி இரவு வரும் வரையில் வெளியே நடமாடினர் அதனால் பாரிய சுகாதார நெருக்கடி எதிர்நோக்கப்படுகின்றது. அதாவது 7 பேர் கொரோனாவோடு 7 நாள்கள் நடமாடியுள்ளனர்.

இதன் காரணத்தினால் – ஆடைத் தொழிற்சாலையினருக்கு வழங்கிய அறிவுரையை ஏற்காத காரணத்தினால் – தற்போது புதுக்குடியிருப்பு பிரதேசமே முழுமையாக முடங்கும் ஆபத்திற்கு செல்வதாக ஒருதரப்பு அச்சம் தெரிவிக்கின்றது.

அதாவது ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் விடுமுறையில் சென்று திரும்பினால் 14 நாள்கள் தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்திய பின்பு பணிக்கு அமர்த்துமாறு விடுத்த கோரிக்கையினை ஏற்க மறுத்தமையே இந்தப் பெரிய ஆபத்திற்கு முழுக் காரணம் எனத் தற்போது சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேநேரம் பெறப்பட்ட மாதிரிகளை அன்றைய தினமோ அல்லது மறு தினமோ சோதனைக்கு உட்படுத்தி பெறுபேற்றை அறிவிக்கும் ஒழுங்கைப் பூர்த்தி செய்வதற்கு மாகாண அதிகாரிகள் தேவையான



பொருள்களை கையிருப்பில் கொண்டிருக்கவில்லை. மாறாக கடந்த திங்கள் அதாவது 10 ஆம் திகதிதான் பரிசோதனைக்குரிய பொருள்களை நோயாளர் காவு வண்டியில் எடுத்து வந்தனர். இந்த அளவில் நிற்கின்றது கொரோனா பாதுகாப்பு பணிகள் என மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## 10ஆம் திகதி வந்த பரிசோதனை உபகரணங்கள் போதுமானவையா?

வடக்கிற்கு மத்தியினால் நியமிக்கப்பட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஸ்ரீதரன் ஊடகவியலாளரிடம் கருத்துரைக்கும்போது பரிசோதனைகள் தடையின்றி இரட்டிப்பான அளவில் இடம்பெறும் என்றார். இது தொடர்பில் போதனா வைத்தியசாலையில் உள்ள ஒரு மூத்த அதிகாரியிடம் கேட்டபோது இதற்கான பதிலை விரிவாக கூற முடியாது. ஒரே பதிலாக கூறுவதானால் பேச்சு பல்லக்கு தம்பி கால் நடை என்ற நிலைமைதான் காணப்படுகின்றது.

ஏனெனில் போதனா வைத்தியசாலையில் கொரோனா பகுதி மற்றும் ஆய்வுகூட ஊழியர்கள் அணியும் பாதுகாப்பு உடை (கிற்ஸ்) ஒருவர் ஒரு நாளுக்கு ஒன்றே அணிய முடியும். அவ்வாறானால் எமது இடத்திற்கு பன்னிரெண்டும் பல்கலைக்கழக ஆய்வு கூடத்திற்கு ஆறும் தேவையாகவுள்ளன. ஏனைய விடுதிகளிற்கு புறம்பானவை. இவற்றைப் பெற்றுக்கொள்வதே பெரிய விடயமாகவுள்ளது. இதனைவிட இந்த மாத ஆரம்பத்தில் பரிசோதனைக்கான இரசாயனப் பொருள்கள் பெரும் தட்டுப்பாடாக இருந்து தற்போதே வழங்கப்பட்டுள்ளன. ஒரு மாத காலத்திற்கு தேவையானவற்றையேனும் வழங்குமாறு கோரினோம். வந்திருப்பது தற்போதைய வேகத்திற்கு 15 நாள்களிற்குக் கூடப் போதுமானதா என்பதே சந்தேகமாகவுள்ளது. – என்றார்.

## புதிதாக எடுத்து வரப்படும் இயந்திரம் வடக்கிற்கும் கிட்டுமா?

பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையையும் பல மடங்கு அதிகரிக்க வேண்டிய தேவை உள்ளது. அதே நேரம் பழைய இயந்திரங்களையும், அன்பளிப்பாகக் கிட்டிய ஓரளவு வசதி கொண்ட இயந்திரங்களையும் வைத்துக் கொண்டு வடக்கின் 5 மாவட்ட மாதிரிகள் இரு இடங்களில் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்தக் காலத்தில் நாட்டிற்குள் மிக விரைவில் பி.சி.ஆர். பரிசோதனையில் அதி நவீன வசதி கொண்ட 11 இயந்திரங்கள் எடுத்து வரப்படுகின்றன எனத் தெரிகின்றது. இவ்வாறு எடுத்து வரப்படும் 11 இயந்திரங்களில் ஒன்றையேனும் வடக்கின் அதிகாரிகள் கோரிப் பெற வேண்டும் என ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே இந்த புதிய இயந்திரத்தில் ஒன்றையேனும் வடக்கிற்கு பெற்றுக் கொடுக்க அதிகாரிகள் துரித பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது.

தெற்கில் கூறப்படும் கட்டளைகளை வடக்கே அப்படியே சுமந்து வந்து இங்கு முன்வைக்கும் அதிகாரிகள் வடக்கில் உள்ள பிரச்சினைகளை தெற்கிற்கு கொண்டு சென்று ஒப்புவிப்பதில் போதிய அக்கறை செலுத்துவதில்லை என இரண்டாம் நிலை அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.


ஒரு பக்கம் பொரோனா உச்சம்பெற மறுபுறம் 20 பேர் நின்று துடுப்பாட்டம் ஆடியவர்கள், 50 பேர் நின்று சைவ ஆலயங்களில் பூசை வைந்தவர்கள், முகக் கவசம் அணியாது சென்ற முதியவர்களையெல்லாம் மடக்கிப் பிடித்து வீரத்தை காட்டினார்கள். முகக்கவசம் என்றால்என்ன என்றே தெரியாமல் நின்று குருந்தூர் மலையில் இராணுவம் முதல் பௌத்த துறவிகள், பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பூசை வைத்த போது கொரோனாச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமானவர் தனது படையைக் கூட கண்டு கொள்ளாது நித்திரையா கொள்கிறார் என உள்ளூர் மக்கள் கேட்பதிலும் நியாயம் இருக்கத் தான் செய்கின்றது.


குருந்தூர் மலையில் பணியிலுள்ள இராணுவம்

## இந்தியாவில் இருந்தும் ஊடுருவல்

இந்தியாவில் இருந்து தினமும் அதிக அளவில் கடத்தலும், கஞ்சாவும் கைமாறுகின்றமை மட்டுமன்றி தற்போது தினமும் மனிதர்களும் ஊடுருவுகின்றனர். இதில் இந்தியாவில் முகாமில் இருந்தவர்கள், விமானம் மூலம் மிக அண்மையில் பயணித்தவர்கள் மட்டுமன்றி வெளிநாட்டுப் பிரஜைகளும் சர்வ சாதாரணமாக பேசாலை வழியாக ஊடுருவி மன்னார் வந்து அங்கிருந்து பஸ்களில் தத்தமது இடங்களுக்குத் தப்பிச் செல்கின்றனர்.

இவ்வாறு ஊடுருவிய பலரில் இந்தியாவில் பரவும் கொரோனா வகையும் சேர்ந்து வருவதும் இனம் காணப்பட்டுள்ளது. மீனவர்கள் எதைக் கொண்டுவந்தாலும் பணம் கிடைத்தால் போதும் என்ற மன நிலையை ஏற்படுத்தக் கூடாது என்கின்றனர் அதிகாரிகள். ஏனெனில் இந்த ஆண்டு மட்டும் மன்னார் வழியாக 20 பேர் வரையில் ஊடுருவியுள்ளனர் எனவும் இதில் 10 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டனர் எனவும் கூறப்படுவது ஒன்றும் சாதாரண விடயம் அல்ல.


மன்னார் ஊடாக யாழ் வந்தவர்

## முக்கிய பணியாற்றுபவர்களுக்குத் தடுப்பூசி

நாட்டின் அத்தியாவசிய பணிகளை மேற்கொள்பவர்களிற்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு விவரங்கள் தற்போதும் அரசினால் கோரப்பட்டுள்ளன. இருப்பினும் இந்தத் தடுப்பூசியைப் பெறவும் கொழும்பிற்கே பயணிக்க வேண்டும் எனவும் கோரப்படுகின்றது. மாகாணத்திற்கு மாகாணம் பயணத் தடைகாலத்தில் உண்மையில் அந்த தடுப்பூசி மாகாணங்களில் ஏற்றப்பட வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கப் படுகின்றது. ஏனெனில் கொழும்பு சென்று தங்கி ஊசியை பெற்றுவரும் சமயம் கொரோனாவையும் பெற்று வரவேண்டிய சூழல் ஏற்படுமோ என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது.


குருநகர் பகுதியில் வந்திறங்கியவர்

# வடக்கு மாகாண சபையால் உறுதிப்படுத்தப்படுகின்ற சுகாதார தொண்டர்களுக்கு மாத்திரமே நியமனம்



## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வடக்கு மாகாண சபையால் உறுதிப்படுத்தப்படுகின்ற சுகாதாரத் தொண்டர்களுக்கு மாத்திரமே நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த தெரிவு சேவை மூப்பு அடிப்படையில் அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது, இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் விரிவாக ஆராயப்பட்ட நிலையில், தன்னுடைய நியாயங்களை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, மேற்குறிப்பிட்டவாறு நியமனங்களை வழங்கத் தீர்மானித்துள்ளார் எனவும் கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் இன்றிப் பல வருடங்களாகக் கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக அமைச்சரவை கூட்டங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், ஒரு லட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் ஊடாக நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


காலைக்கதிர் Kalaikkathir



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

**வே.வரதசுந்தரம்**

‘நாம் ஓரடி எடுத்து வைத்தால் பகவான் பாபா மிகவிரைவில் 10 அடிகள் எடுத்துவைப்பார். இப்படியான நடமாடும் தெய்வத்துடன் தொடர்பு ஏற்படுத்துவது நாம் பலஜென்மங்களில் செய்த புண்ணிய பலனேயாகும். சுவாமி கர்மவினையையும் மாற்றுவார். தலைவிதியையும் மாற்றுவார்.’ – இவ்வாறு உறுதியாகக் கூறுவார் சாயிபக்தன் சாயி பிரசாந்த். இவர் பிரசாந்தி நிலையத்தில் கணக்காளராகவும், சென்னையில் நடமாடும் வைத்தியசாலையின் இணைப்பாளராகவும் பணி பல ஆற்றிவருகின்றார். அன்னார்பகவானின்மகிமைகூறக்கேட்போமா?



‘டாக்டர் அல்ரோஜா புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்திலுள்ள பொதுவைத்தியசாலையில் பணிப்பாளராகப் பணியாற்றியவேளை வீடு, மனைவி, மக்கள் என்று கவலைகொள்ளாமல் 24 மணிநேரமும் பணிபுரிந்தார். இவர் சுவாமியுடன் நேரடியாகக் கதைப்பார். ஒருநாள் சுவாமியிடம் ஓடிப்போய் பாத நமஸ்காரம் கோரினார். அப்போது அவருக்கு வயது 76.

‘பாத நமஸ்காரத்துக்கு இப்போது அப்படியென்ன அவசரம்?’ என்று கேட்டார் சுவாமி.

‘இன்று எந்தன் பிறந்தநாள். சோதிடர்கள் இது எனது இறுதிவருடமென்று கூறுகின்றனர். அதனாலேதான் பாதநமஸ்காரம் கோருகிறேன் நான்’ என்றார் அல்ரோஜா.

‘80 ஆவது வயதும் தாண்டி, என்னிடம் பாதநமஸ்காரம்பெற்று இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறாய் அல்லவா? உன்வயதெல்லையை நான் 100 வயது வரை நீடித்துள்ளேன். நீ யாரை நம்புகிறாய்? என்னையா, இல்லை ஜோதிடர்களையா?’ இப்படி பகவான் கூறியதும் கைகூப்பி நின்றார். ஈற்றில் அல்ரோஜா 101 அகவை வரை வாழ்ந்தார்.

நான் புட்டபர்த்தி பல்கலைக்கழகத்தில் பயின்ற காலமது. விடுதியில் உணவு விநியோகிக்கப்படும் வேள, உருசிமிக்க பன்னீர் ஒரேயொரு கரண்டியே தருவார்கள். பன்னீர் என்றால் எமக்கெல்லாம் பெரு விருப்பம். ஒருநாள் ஒருமாணவன் தன்னுணவுத்தட்டை சுவாமியின் படத்துக்கு முன்னால் எடுத்துச்சென்று,



‘பாபா எங்களுக்குக் கூடுதலாக பன்னீர் கிடைக்க வேண்டும்’ என்று வேண்டுதல் செய்தான். பின்னர் தரிசனத்துக்குச் சென்றான். சுவாமி அந்த மாணவனை அழைத்தார். விடுதிமேலாளரை கூட்டிவரச் சொன்னார். அவர் வந்ததும் ‘ஏன் என்னுடைய பையன்களுக்குப் போதிய சாப்பாடு கொடுப்பதில்லை? அவர்களுக்குப் போதிய அளவு கொடுத்தல் வேண்டும். நான் எல்லாம் பார்த்துக் கொள்வேன்.’ என்று ஆலோசனை வழங்கினார்.

தரிசனம் முடிந்து விடுதி திரும்பியதும், விடுதி மேலாளர் அந்த மாணவனை அழைத்து, ‘உணவில் ஏதாவது குறையிருப்பின், என்னிடம் சொல்லியிருக்கலாமே. ஏன் சுவாமியிடம் சென்று முறைப்பட்டாய்?’ என்று கடிந்துகொண்டார். அம்மாணவனோ ‘சேர் நான் சுவாமியிடம் நேரில்சென்று முறைப்பாடு கொடுக்கவில்லை. பாபாவின் படத்துக்கு முன்னே சென்று வேண்டினேன். அவ்வளவுதான்’ என்று விளக்கம் கொடுத்தான்.

பகவான் பாபா எங்கள் பிரார்த்தனையைக் கேட்டு இரங்குகின்ற, எங்கள் தேவைகளைக் கவனிக்கின்ற கருணையுள்ளம் கொண்ட தெய்வம்.

காஞ்சிப் பெரியவர் எமது வம்சாவளிக் குருவென்பதால் நாம் குடும்பமாக அவரைத் தரிசிக்க அடிக்கடி

> நாம் ஓரடி எடுத்து வைத்தால் பகவான் பாபா மிகவிரைவில் 10 அடிகள் எடுத்துவைப்பார். இப்படியான நடமாடும் தெய்வத்துடன் தொடர்பு ஏற்படுத்துவது நாம் பல ஜென்மங்களில் செய்த புண்ணிய பலனேயாகும். சுவாமி கர்மவினையையும் மாற்றுவார். தலைவிதியையும் மாற்றுவார்.

செல்வோம். ஒருதடவை நாம் சென்றபோது எனக்கு வயது 5. இதுவரை எனக்கேன் உபநயனம் செய்யவில்லை என்று மகாபெரியவர் பெற்றோரிடம் கேட்டார். ‘மக்கள் சத்தியசாயி பாபா பாடசாலையில் படிக்கிறார்கள். சாயிபாபாவே உபநயனம் செய்வார்கள்’ என்றனர் பெற்றோர். ‘நீங்கள் நினைத்தபடி நடக்கும்’ இப்படி மகாபெரியவர் உறுத. தந்தார்.

பின்னர், நாம் புட்டபர்த்தி சென்றவேளை, பகவான் பாபா காதிலே காயத்திரி மந்திரம் ஓதி எனக்கும், எனது அண்ணனுக்கும் உபநயனம் செய்துவைத்தார்.

இரண்டுமாதங்களுக்குப்பிறகு பாடசாலை விடுமுறையின்போது, மகாபெரியவரைப் பார்க்கச் சென்றோம். அவர் பெற்றோருக்கு விபூதி அருளினார். எனக்குத் தரவில்லை. நாம் பதறி நிற்க, மகா பெரியவர் இப்படி விளக்கம் கூறினார் ‘நீ மிகவும் அதிர்ஷ்டசாலி. பிரம்மனே உனக்கு பிரம்ம உபதேசம் தந்து உபநயனம் செய்துள்ளார். இந்த ஜென்மத்தில் உனக்கு இதைவிட என்னதான் வேண்டும்?’

மகாபெரியவர் காஞ்சிப் பெரியவரே பகவான் பாபாவை ‘பரப்பிரம்மம்’ என்று போற்றியுள்ளார். அது மட்டுமல்ல, அண்மையில் நாம் தற்போதைய பீடாதிபதியான விஜயேந்திர சரஸ்வதிசுவாமிகளைச் சந்திக்கப் போனோம். அங்கு பிரசன்னமாயிருந்தவர்கள், அவரிடம் ‘சத்தியசாயி பாபாவைப் பற்றி அறிகிறோம். அவரைப்பற்றித் தங்கள் நிலைப்பாடு என்ன?’ என்று வினவினர். விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் கூற்று பகவான் பாபாவின் மகிமையைப் பறைசாற்றியது. இதோ அவர் கூற்று:



‘நாங்கள் எல்லோரும் தபசிகள். மடாதிபதிகள். பாபாவோ எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவர்.’

# ஆற்றில் இருந்து ஆணின் சடலம்

**எட்டியாந்தோட்டையில் மீட்பு**



எட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி ஆறுக்கு நீர் வழங்கும் கந்தலோயா ஆற்றில் ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என எட்டியாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் எட்டியாந்தோட்டை கந்தலோயா தோட்ட கீழ் பிரிவைச் சேர்ந்த 39 வயதுடைய சுப்பிரமணியம் நடராஜ் என்ற 2 பெண் குழந்தைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த 10 ஆம் திகதி முதல் காணாமல் போய் விட்டார் எனப் பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எனினும், குறித்த ஆணின் மரணம் தொடர்பாகப் பல கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ருவான்வெல்ல நீதிமன்ற நீதிவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை எட்டியாந்தோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிறுவனங்களில் 25 வீதமானோரே கடமையில் ஈடுபடுதல் வேண்டும்

**அஜித் றோஹண அறிவிப்பு**

இலங்கையில் கொவிட் தொற்றுப் பரவலால் நிறுவனங்களில் 25 வீதத்துக்கும் அதிகமானவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றமை கண்டறியப்பட்டால், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண எச்சரித்துள்ளார்.

அதற்கமைய நிறுவனத்தின் தலைவர் மற்றும் பணியாளர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்து சேவைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மாகாண எல்லைகளில் கோவிட் பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியுள்ளார்.

# புதுடில்லி இலங்கைத் தூதரகத்தில் கடமையாற்றும் 6 பேருக்கு தொற்று

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் கடமையாற்றும் ஆறு உறுப்பினர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் குறித்த அலுவலகத்தின் கடமைகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தடுப்பூசி வழங்கப்படாவிட்டால் பணிகளிலிருந்து விலகுவோம்

**தபால் தொழிற்சங்கம் எச்சரிக்கை**

தடுப்பூசி வழங்கப்படாவிட்டால் பணிகளிலிருந்து விலகிக் கொள்ள நேரிடும் என்று தபால் சேவை தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தபால் திணைக்களத்தின் பணியாளர்களுக்கு இவ்வாறு தடுப்பூசி வழங்கப்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தபால் மற்றும் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.காரியவசம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பணியாளர்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படுவதன் அவசியத்தை நேற்று (புதன்கிழமை) தபால்மா அதிபருக்கு எடுத்துரைத்துள்ளோம்.

நெருக்கடியான சூழ்நிலையிலும் முதியோர் கொடுப்பனவு உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காக பணியாளர்கள் பல்வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மணி விழா

13.05.2021

## வாழ்த்துக்கள்



## செல்வி ஜெயா தம்பையா

பணிப்பாளர் - முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி,
கல்வி அமைச்சு, வடமாகாணம்.

'வடலிகள் வானுயர' உம் பணி தொடர
எங்கள் வாழ்த்துக்கள்!!!

- ஆறுதல் சமூகம் -

காலைக்கதிர் Kalaikkathir

# 24 மணித்தியாலத்தில் 28 பேருக்கு மட்டக்களப்பில் கொவிட் தொற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலயத்தில் 28 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ள நிலையில் அங்கு பதிவாகியுள்ள கொவிட் தொற்றுக்கு இலக்காகிய நோயாளர்களின் எண்ணிக்கை 1,313 ஆகஅதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர். நா.மயூரன் நேற்றைய தினம் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனையில் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், வாழைச்சேனை, பட்டிப்பளை, செங்கலடி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவர் உட்பட 3 பேருக்கும். களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர் உட்பட 28 பேருக்கு கடந்த 24 மணித்தியாலயத்தில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் கொவிட் தொற்றால் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்த இருவருடன் நேரடியாக தொடர்புடைய உறவினர்களான ஆரையம்பதியில் 7 பேருக்கும், அவ்வாறே மட்டக்களப்பு மாமாங்கத்தில் 7 பேருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது. இதேவேளை மாவட்டத்தில் 3 ஆவது கொவிட் அலையில் பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கை 330 பேராக அதிகரித்துள்ளதுடன், மாவட்டத்தில் 1,313 ஆக அதிகரித்துள்ளதுடன் 16 உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 6 லட்சம் ஸ்புட்னிக் வி ஊசி 2 வாரங்களில் இலங்கைக்கு

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளில் மேலும் 6 லட்சம் டோஸ்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இலங்கையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே இதனைத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி கொவிட் தடுப்பூசியின் முதல் தொகுதி கடந்த மூன்றாம் திகதி இரவு இலங்கையை வந்தடைந்தது.

அதனடிப்படையில், முதல் தொகுதியில் 15 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா சென்றார் பஸில் ராஜபக்ஷ



பொருளாதார புத்துயிர் மற்றும் வறுமையொழிப்பு பற்றிய ஜனாதிபதி செயலணியின் தலைவரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று (புதன்கிழமை) அதிகாலை அவசரமாக அமெரிக்கா சென்றுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவசரமாக பெற்றுக்கொள்ள வேண்டிய மருத்துவத் தேவைக்காகவே அவர் அமெரிக்கா பயணமானார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கடந்த செப்ரெம்பர் மாதமும் அதேபோல கடந்த ஏப்ரல் மாதத்திலும் பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவுக்கான பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தமையோடு அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பயணத்தை ரத்து செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்று அமெரிக்காவுக்குச் சென்றுள்ள பஸில் ராஜபக்ஷ, ஒருமாதம் வரை அங்கு தங்கியிருக்கவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### தினையிலுள்ள ஆரோக்கிய பலாபலன்கள்



காளானை அறுவடை செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

காளான் இல்லத்தினுள் நுழைய முன்னர் இரண்டு கைகளையும் நன்கு கழுவுவதோடு, சுத்தமான கத்தரியையும், சுத்தமான பாத்திரத்தையும் பயன்படுத்த வேண்டும்.

காளானை அறுவடை செய்பவரும் சுத்தமானவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பாக அசுத்தமான ஆடைகளின் மூலம் சிற்றுண்ணிகள் இல்லத்தினுள் பரவலாம்.

காளானை அறுவடை செய்யும் போது கொத்தாக அறுவடை செய்வதோடு, காளான் மீதிகள் இல்லாதவாறு முழுமையாக அறுவடை செய்ய வேண்டும். காளான் காம்பின் மீதிகள் காணப்படுமாயின் அதனை சுத்தமான கூரான கத்தியினால் அகற்ற வேண்டும்.

அறுவடை செய்யும் போது தொற்றலேற்பட்ட காளான் பாகங்கள் காணப்படுமாயின் அவற்றையும் அகற்றி எரித்து விட வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி


# மணி விழா வாழ்த்து



## செல்வி. ஜெயா தம்பையா

BA(Hons) Dip in Edu, MEd
ஆரம்பபிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு,
கல்வி அமைச்சு, வடமாகாணம், யாழ்ப்பாணம்.

மழலைகளின் முதற்படியாம் முன்பள்ளி
மகிழ்வான கற்றல் கற்பித்தல் சூழலை ஏற்படுத்தி
முன்பள்ளிக் கல்வி விருத்திக்கு வித்திட்ட
எங்கள் வழிகாட்டியே பணிப்பாளரே!
முன்பள்ளி ஆசிரியருக்கான
முதற்படியாம் ஊக்குவிப்பை
வழங்க அயராது செயற்பட்ட எம் அன்னையே!
உங்கள் பணி தொடர மனமார வாழ்த்துகிறோம்.

வடமாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கம்

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்



அங்கம் 02

- செல்லத்துரை ரவீந்திரன் -

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



**6. இனப் படுகொலை என்றால் என்ன?**

நாங்கள் எண்ணுவது போல், எங்கள் இனம் என்பதற்காக, எமக்கு நடப்பவை எல்லாம் இனப் படுகொலை என்று நாம் கருத முடியாது நாம் அதற்கு வியாக்கியானங்கள், எம் நினைப்பிற்கேற்ப ஏற்படுத்தவும் முடியாது. இனப்படுகொலை என்பது சர்வதேச சட்டத்தில் நாடுகளிடையே மரபு முறையாக ஏற்கப்பட்ட “இனப்படுகொலை தடுப்பு ஒப்பந்தத்தில்” (**Convention on prevention of Genocide**) அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் ஐ.நாவினால் ஏற்கப்பட்டு 12 ஜனவரி 1951இல் அமுலுக்கு வந்தது. இதனை 152 அங்கத்துவ நாடு கள் அங்கீகரித்து உள்ளன.

ஆகவே அதிலுள்ள அர்த்தத்திலும் வரையறையிலும்தான் இனப்படுகொலை என்றால் என்ன என்று பார்க்க வேண்டும். இனப்படுகொலை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பின்வரும் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் ஓர் இனப்படுகொலையை முன்னேற்றிச் செல்லும் காரணிகளாக வரையறை செய்யப்பட்டுள்ளன.

1. ஒரு தேசத்தை அல்லது ஓர் இனத்தை அல்லது மதப் பிரிவினரைச் சார்ந்த அங்கத்தினரைக் கொலை செய்வது. **(Killing a member of a national, ethnic, racial or religious group)**

2. மேற்சொல்லப்பட்டவர்களின் அங்கத்தினருக்கு பாரதூரமான உடற் காயங்களோ அல்லது உள ரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்தல்.

3. வேண்டுமென்றே, மேற்சொல்லப்பட்டவர்களின் வாழ்வாதாரங்களை பாதிக்கும் நடவடிக்கைகளை எடுத்து அவர்களை அழிந்து போகும் வழிகளை ஏற்படுத்துவது.

4. மேற்சொல்லப்பட்டவர்களின் அங்கத்தினர் இன விருத்தி செய்வதை தடை செய்வது.



5. மேற்சொல்லப்பட்டவர்களுக்கு பிறந்த குழந்தைகளை பலவந்தமாக பிரித்து பிறிதோருக்குக் கொடுப்பது.

மேற்படியான நடவடிக்கைகள் ஒரு தேசத்தை அல்லது ஓர் இனத்தை அல்லது ஒரு மதம் சார்ந்த பிரிவினரை ஒட்டு மொத்தமாக அல்லது பெருவாரியாக அழிக்கும் நோக்கில் செய்யப்பட்டால் அது இனப்படுகொலையாகக் கருதப்படும்.

விளக்கத்திற்காக ஆங்கிலத்தில் சொன்னால் –

**"The above acts committed with intent to destroy in whether or in part a national, ethnic, racial or religious group is genocide"**

**7. தமிழர்களுக்கு நடந்த அட்டூழியங்களைக் கணக்கெடுக்கும் போது அவை ஒரு இனப்படுகொலையை தானே படம் பிடிக்கிறது?**

ஆம். செயல்களைப் பார்க்கும்போது அவை ஓர் இனப்படுகொலையின் அம்சங்களை பெருமளவில் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால் முக்கியமானது எதுவென்றால் இவை அப்படியான அழிப்புக்காகத் திட்டமிட்டு செய்யப்பட்டவை என்பதை ஆதாரப்படுத்தி நிரூபித்தல் வேண்டும். அதைத்தான் நவநீதம்பிள்ளை அம்மையார் சுட்டிக் காட்டுகிறார்.

**8. அப்படியான இனப்படுகொலையை எப்படி வகைப் படுத்தி ஆதாரப்படுத்துவது?**

ஆதாரப்படுத்தி, நிரூபிப்பது சட்ட வல்லுநர்களின் பணி. இது பாரிய பொறுப்பு வாய்ந்தது. அதற்கு முதலில் ஆதாரங்களை சேகரித்து தொகுக்கும் வேலைகள் முக்கியம்.

இனப் படுகொலை விவகாரங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள், பல சர்வதேச மனித உரிமை சட்டத்தரணிகள் பின்வருபவை, வழமையாக ஓர் இனப் படுகொலை உருவாகி, தொடர்ந்து நடைபெறும் அறிகுறியானவை என்று குறிப்பிடுகிறார்கள்.

முதலாவது - பட்டியலிடுதல் அல்லது வகைப்படுத்தல். **(Classification)**

இரண்டாவது - குறியிடப்படுதல். **(Symbolization)**

மூன்றாவது - பாகுபாடு காட்டுதல். **(Discrimination)**

நான்காவது - மனித நேயமற்ற செயல்கள். **(Dehumanization)**

ஐந்தாவது -அமைப்புகளின் தோற்றம். **(Organization)**

ஆறாவது - துருவப்படுத்துதல் **Polarisation)**

ஏழாவது - தயாரித்தல். **(Preparation)**

எட்டாவது - துன்புறுத்தல்கள். **(Persecution)**

ஒன்பதாவது - அழித்தல். **(Extermination)**

பத்தாவது - மறுத்தல். **(Deniol)**

இவை படிப்படியாக உருவாகும் செயல்கள். யூதர்களுக்கு எதிராக ஹிட்லரின் இன ஒழிப்பை மனத்திரையில் ஓடவிட்டால், இந்த அறிகுறிகள் புரியும். இப்படியான முனைப்புகளே மற்றைய இனப்படுகொலைகளிலும் நடந்தன. இவற்றை முன் கூட்டியே கணக்கெடுத்து ஆவன செய்தல் அதனைத் தவிர்க்க மார்க்கங்கள் ஏற்படும் என்று அதனை ஆராய்வு செய்யும் புத்திஜீவிகள் கூறுகிறார்கள்.

**9. மேற்படி அறிகுறிகளின் அடிப்படைகளில் தமிழரின் தலைவர்கள் இனப் படுகொலை களைத்தான் பக்குவப்படுத்தி கோவைப்படுத்தினார்களா?**

இந்த கேள்வி மிகவும் மனச் சோர்வை தருகிறது விவரமாக பதில் தருவதனால் இலங்கையின் சுதந்திர காலங்களிலிருந்து இன்று வரையிலான அரசியலை விரிவாக ஆராயவேண்டும் அதுவின்றி தமிழ் அரசியல் தலைமைகளின் நிலைப்பாட்டை உணரவேண்டும் அதை தவிர்த்து பொருத்தமானது என கருதுவதை குறிப்பிடுகிறேன்.

மாற்றங்கள் உலகின் நியதி அதன் அடிப்படையிலேயே காலணித்துவ ஆதிக்கம் ஒழிந்து தேசங்கள் நாடுகள் சுதந்திரம் பெற்றன. அந்த மாற்றங்களில் பழமையை மாத்திரமே பார்ப்பவர்களும் அன்றில் இன்றையதையை மட்டும் பார்ப்பவர்களும் நிச்சயம் எதிர்காலத்தை இழந்து விடுவார்கள். எங்களுக்கு நிகழ்வதும் அதுவே. எங்களது தலைவர்கள் இராஜதந்திர திறனுடன் தீர்க்கதரிசனமிக்க முடிவுகளை எடுக்காமல், தற்சமயங்களாகவும் தங்கள் வசதிகளுக்காகவும் ஓர் எதிர்மறை அரசியலை நடத்தியமை எங்களது இன்றைய நிலைக்கு முக்கிய காரணம்.

தமிழ் தேசம் அல்லது அரசு ஐரோப்பியர்களிடம் இழந்த இறைமையை, சுதந்திரம் பெற்றபோது, எங்களிடமே மீளத்தர வேண்டும் என்று நாம் நிர்ப்பந்திக்கவில்லை. எங்களுக்கு சம உரிமை இருக்க வேண்டும் என்று கோரினோம். அயலில் பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது. ஆனாலும் நாம் அலட்டிக் கொள்ளவில்லை. இலங்கை என்ற தேசத்தைக் கட்டி எழுப்பலாம் என்று நம்பி நின்றோம். சுதந்திரம் கிடைத்தவுடனேயே, 1948இல் மலையக தமிழரை, ஒரு மில்லியனுக்கும் மேலாக வரை இந்திய வந்தேறு குடிகள் என பட்டியலிட்டு வகைப்படுத்தி நாடற்றவராக்கினர். அதற்கும் எங்களது சில தலைவர்கள் துணை போனார்கள் தீர்க்க தரிசனம் தந்தை செல்வாவிடம்தான் இருந்தது.



1956இல் சிங்களம் மட்டும் சட்டம் போன்றவை பாகுபாடு காட்டப்படுதல் என தமிழருக்கு நடந்த அனர்த்தங்களை தமிழர் ஓரங்கட்டப்படுவதாகவே நாடாளு மன்றத்தில் ஓலமிட்டோம்.

இதற்கு விடாப்பிடியாக எமது தலைவர்கள் நாடாளு மன்றத்தில் வருடா வருடம் நடத்திய உரைகள் தான் ஆதாரங்கள் இவைகள் எல்லாம் இரு இனங்களுக்கும் இடையில் வேற்றுமைகள் தோன்றுவதையும் ஒற்றுமை இழக்கின்றன என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்துபவையாகவே இருந்தன. ஓர் இனத்தின் பாரபட்சம் பற்றியே பேசினார்கள், எழுதினார்கள். ஓர் இன அழிப்பின் ஆரம்ப முத்திரைகளாக இவை ஆணித்தரமாக சொல்லப்படவில்லை. இப்போது இவை ஆராயப்படுமானால் பண்டாரநாயக்கா, ஜெயவர்தனா, கே.எம்.பி. ராஜரத்தினா, சிறில் மத்தியூ போன்ற பல சிங்கள தலைவர்களால் தமிழர் குறியிடப்பட்டு பாகுபாடு காட்டப்படவேண்டும். அவர்கள் இலங்கையில் உரிமை கோரமுடியாது என்ற வாதங்களை முன்வைத்து இனப்படுகொலையின் ஆரம்ப கட்டமைப்புகளை வைத்தார்கள் என்பதைக் காணலாம்.

(தொடரும்.....)

காலைக்கதிர் Kalaikkathir

# அலரி மாளிகையில் மஹிந்தவை அவசரமாகச் சந்தித்த சீனத் தூதர்

## கொரோனாத் தடுப்பு தொடர்பில் முக்கிய பேச்சு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இலங்கைக் கான சீனத் தூதுவர் ஷீ ஜன்ஹொங் இன்று (புதன்) நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப் பில், இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார நட்புறவு குறித்து கலந்துரையாடப் பட்டுள்ளது.

சீன ஜனாதிபதியின் வாழ்த்துக்களை சீனத் தூதுவர், பிரதமர் மஹிந்தவுக்கு இதன்போது எத்தி வைத்துள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தடுப்பு நடவடிக் கைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் பிரதமர் மஹிந்த எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு சீனத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாட லில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# 4 மாதக் குழந்தை திடீரென மரணம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்கச்சேரியடியைச் சேர்ந்த 4 மாதக் குழந்தை ஒன்று இன்று (புதன்) அதிகாலை பரிதாபகரமாக உயிரிழந்தது .

யாழ்ப்பாணம் கச்சேரி வீதி யில் வசிக்கும் தாயார் ஒருவ ருக்கு கடந்த 4 மாதங் களிற்கு முன்னர் இரட்டைக் குழந்தைக பிறந்துள்ளன.

இவர்களை வழமை போன்று அதிகாலை 12 மணியை தாண் டிய நிலையில் பால் ஊட்டி தாயார் நித்திரையாக்கினார். அதிகாலை ஒரு குழந்தையின் அசைவைக் காணாது பதற்றத்துடன் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசா லைக்கு கொண்டு சென்ற சம யம் குழந்தை உயிரிழந்திருந் ததை மருத்துவர் உறுதி செய் தார்.

உயிரிழந்த குழந்தையின் மரண விசாரணையை மேற் கொண்ட திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் பிரேதபரி சோதனை மேற்கொள்ள உத்தர விட்டார்.

# தடுப்பூசி கொள்வனவுக்கு 136 கோடி ரூபா ஒதுக்கீடு



இலங்கையில் பரவி வரும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக சீன, ரஷ்ய, அமெரிக்க தடுப்பூசிகளைப் கொள்வனவு செய்வதற்காக 136 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள் ளது எனவும், தேவைப்படும் பட் சத்தில் மேலதிகமாக நிதி ஒதுக்க முடியும் எனவும் சுகாதார அமைச் சர் பவித்ரா வன்னியாராச்சி தெரி வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீன தடுப்பூசிகளைக் கட்டம் கட்டமாகக் கொண்டு வரும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டத்தில் சீனா வழங்கியுள்ள 15 ஆயிரம் சினோ போர்ம் தடுப்பூசிகள் பொதுமக் களுக்கு ஏற்றும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன் னும் இரு வார காலத்தில் மேலும் 65 ஆயிரம் தடுப் பூசி களை சீனாவிடம் இருந்து பெற் றுக்கொள்ள அரசு உடன்படிக்கை செய்துள்ளது.

இந்நிலையில் ஜூலை மாதம் முதலாம் வாரத்தில் அமெரிக்கா வின் பைசர் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யவும் இணக் கம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐந்து லட்சம் தடுப்பூசிகள் ஜூலை மாதத்தில் இலங்கைக்குக் கிடைக்கவுள் ளன. இவ்வாறு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யவே தற் போது அரசு 136 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது - என் றார்.

# பதுளை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

## 10 பேர் படுகாயம்



பதுளையிலிருந்து தியனகல தோட்டத்துக்கு ஆள்களை ஏற் றிச் சென்ற வான் ஒன்று பதுளை - பசறை மூன்றாம் கட்டை பகுதி யில் வைத்து தடம்புரண்டு விபத் துக்குள்ளாகியதில் ஒருவர் பலியா கியுள்ளார். மேலும் 10 பேர் படு காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளனர். விபத் தில் வானின் சாரதியே பரிதாபகர மாக பலியாகியுள்ளார். விபத்து தொடர்பாக பதுளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரசவத்தின் பின் தாய் உயிரிழப்பு

## யாழில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,மே.12

குழந்தைப் பேற்றிற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட தாயார் ஒருவர் இன்று (புதன்) பரி தாபகரமாக உயிரிழந்தார்.

ஜீவசுமன் மேரி சலுயா, என் னும் 29 வயதையுடைய, தெல்லிப் பளை பார் ஒழுங்கையைச் சேர்ந் தவரே உயிரிழந்தவராவார்.

இரண்டாவது குழந்தைப் பேறு காலத்தில் இருதய சிகிச்சை பெற்று வந்த இந்தத் தாயார் ஓர் ஆண் குழந்தையை பிரசவித்து சிறிது நேரத்தில் இருதய நோயால் பெரும் சிரமப்பட்டுள்ளார். இத னால் உடனடியாக அவசர சிகிச் சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார்.

அவசர சிகிச்சைக்கு மாற்றப் பட்டு 2 மணி நேரம் வைத்திய களின் பெரும் முயற்சி பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தார். குழந்தை நலமாகவே உள்ளது.

# வடக்கில் கொரோனா நிலைமை அதிகரிப்பு; கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு தேவை

## யாழ்.போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வேண்டுகோள்




(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று நிலைமை அதிகரித்துக் காணப் படுகின்றது. தொற்றைக் கட்டுப் படுத்த பொதுமக்களின் ஒத்து ழைப்பு தேவை.

- இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்

யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் நேற்று (வியாழன்) நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், பி.சி.ஆர். பரிசோதனை இரண்டு மடங்காக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் மருத் துவ மாணவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் பணி தொடங்கவுள்ளது.

ஒரு நாளில் ஒரு தடவை மேற் கொண்ட பரிசோதனையை இனி வரும் காலத்தில் இரவு நேரத்தி லும் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ளது. இதன் மூலம் நாளாந் தம் 800 இற்கும் மேற்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளை மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. இதற்கு பொதுமக்க ளின் ஒத்துழைப்பு என்பது மிக முக்கியமானது. சுகாதார நடை முறைகள் மற்றும் சுகாதாரத்து டன் கூடிய பழக்கவழக்கங்க ளைக் கையாண்டு இந்தத் தொற் றிலிருந்து விடுபட வேண்டும் என்பதையும் நாங்கள் முக்கிய மாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தற்போது யாழ். குடாநாட்டில் தொற்று அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இலங் கையிலும் சரி யாழ் மாவட்டத்தி லும் சரி தொற்று அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. வெளி நோயாளர் பிரிவுக்கு வருபவர்க ளுக்கு ஏதாவது நோய் அறிகுறி கள் சந்தேகத்துக்கிடமான முறை யில் இருந்தால் அவர்கள் உட னடியாக அண்டிஜன் பரிசோத னைக்கு உட்படுத்தப்படுகின்ற னர். அதனைத் தொடர்ந்து பி.சி. ஆர்.பரிசோதனையும் அவர்க ளுக்கு மேற்கொள்ளப்படுகின்றது. அப்படிச் செய்யும் போதும் நோயா ளிகளின் எண்ணிக்கை அதிகரித் துக் கொண்டே செல்கின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையின் நிர்வாகத்தின் கீழ் கோப்பாய் தேசிய கல்வியல் கல் லூரி தனிமைப்படுத்தல் மையம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அங்கு போதுமான ஒட்சிசன் சிலிண்டர்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு தங்கி சிகிச்சை பெறுவோருக்குத் தேவையான வசதிகள், அம்பு லன்ஸ் வாகன வசதிகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு நோயாளிக்கு ஒட்சி சன் தேவை என்றால் அவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என் றார்.

# கொழும்பில் கொரோனா உக்கிரம்

நாட்டில் இன்று (புதன்) காலை நிலை வரப் படி, கடந்த 24 மணி நேரத்தில் மொத்தம் 2 ஆயிரத்து 568 நபர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. இவர்களில் அதிகமான தொற்றாளர்கள் கொழும்பில் பதி வாகியுள்ளனர்.

அதன்படி, கொழும்பு மாவட்டத் தில் மாத்திரம் 606 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொள்ளுப்பிட்டி யில் 14 பேரும், நாரஹேன்பிட் டியில் 18 பேரும், பொரளையில் 10 பேரும், கொழும்பு நகர எல் லையில் 53 பேரும், அவிசா வளையில் 22 பேரும், பம்பலப் பிட்டியில் 14 பேரும், பொரலஸ் கமவில் 19 பேரும், கொதடுவை யில் 29 பேரும், ஹோமாகம வில் 15 பேரும், கொட்டாவையில் 30 பேரும், பிலியந்தலையில் 36 பேரும், தலங்க மையில் 19 பேரும், வெலிகடையில் 18 பேரும் மற்றும் வெல்லம்பிட்டியில் 19 பேரும் இவ்வாறு பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, 300 பேர் கம் பஹா மாவட்டத்தைச் சேர்ந்த வர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களில், தொம்பே பிரதே சத்தில் 22 பேரும், துன்கல்பிடிய பிரதேசத்தில் 24 பேரும், ஜா-எல பிரதேசத்தில் 31 பேரும், கட் டானை பிரதேசத்தில் 18 பேரும், கட்டுநாயக்க பிரதேசத்தில் 62 பேரும், கொச்சிகடை பிரதேசத் தில் 15 பேரும், மினுவங்கொடை பிரதேசத்தில் 13 பேரும், நீர் கொழும்பு பிரதேசத்தில் 35 பேரும் மற்றும் நிட்டம்புவ பிரதே சத்தில் 11 பேரும் பதிவாகியுள்ளனர்.

இதேபோல் களுத்துறை மாவட்டத்தில் இருந்து 417 தொற் றாளர்கள் இனங் காணப்பட்டுள் ளனர்.

மேலும், குருநாகல் மாவட்டத் தில் 196 தொற்றாளர்களும், காலி மாவட்டத்தில் 148 தொற்றாளர் களும், மாத்தளை மாவட்டத்தில் 108 தொற்றாளர்களும் மற்றும் கண்டி மாவட்டத்தில் 110 தொற் றாளர் களும் பதிவாகியுள்ளனர்.

# மேலும் 13 இடங்கள் தனிமைப்படுத்தல்!

இலங்கையில் இன்று காலை முதல் மேலும் 13 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட் டுள்ளன.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொல முன்ன மற்றும் மாம்பே மேற்கு கிராம சேவகர் பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தின் மஹபாகே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலபிட்டிவல நவ மஹர கிராமம் மற்றும் மகுல பொகுன கிராமத்தின் மகுல பொகுன வீதி கிராம சேவகர் பிரி வுகளும் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, காலி மாவட்டத் தின் இமதுவ பொலிஸ் பிரிவுக்குட் பட்ட திக்கும் புர கிராம சேவகர் பிரிவு மற்றும் அஹங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டானிகத கிராம சேவகர் பிரிவு, இரத்தி னபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சன் னஸ்கம, தொட்டகஸ்வின்ன மற்றும் கொடகம கிராம சேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பொலிஸ் பிரிவுக்குட் பட்ட சூரிய வெவ நகர் கிராம சேவகர் பிரிவு, கேகாலை மாவட்டத்தின் புளத் கொஹூபிட்டிய பொலிஸ் பிரிவுக் குட்பட்ட உடபொத்த மற்றும் கெந்தாவ கிராம சேவகர் பிரிவுக ளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் கொரோ னாத் தொற்றுப் பரவல் நிலைமை யைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது .

# மன்னார் மக்களைப் பாதுகாப்பது குறித்து அவசர கலந்துரையாடல்

## மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடந்தது





இந்தியாவில் இடம்பெற்று வருகின்ற அபாயகரமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எமது மாவட்டத்தில் இவ்வாறான சம்பவம் ஏற்படாத விதத்தில் அனைவரும் இணைந்து சுகாதார நடை முறைகளை உரிய முறையில் பின்பற்றி மாவட்ட மக்களையும், மாவட்டத்தையும் பாதுகாக்க முன் வர வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட மக்களை கொவிட் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பாகவும், முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயும் விசேட கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தில் சுகாதாரத் துறையினர், பொலிஸ், இராணுவம், கடற்படை அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், அரச தனியார் போக்குவரத்துப் பிரதிநிதிகள், வர்த்தக சங்கம் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். இந்தக் கலந்துரையாடலில் திட்டங்கள் பல முன்வைக்கப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்வரும் நாட்களில் மாவட்ட ரீதியாக எவ்வாறான நடைமுறைகளைக் கையாள வேண்டும் என்பது தொடர்பாகவும் குறிப்பாகத் தற்போது மாகாணங்களுக்கு இடையே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளமையால் அத்தியாவசிய தேவைகளை அடையாளம் கண்டு, அவர்கள் வெளி மாகாணங்களுக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான 'பாஸ்' நடைமுறைகள் தொடர்பாகவும் நாங்கள் இன்றைய தினம் (செவ்வாய்) கலந்துரையாடி உண்மையில் அத்தியாவசிய சேவைகளை வழங்குபவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு மாத்திரமே அத்தியாவசிய சேவைக்கான பாஸ் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புதிது புதிதாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையைத் தவிர்த்துக் கொள்வது தொடர்பாகவும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அத்தோடு மீனவர்கள் கட்டாயம் தமது கைகளில் வழங்கப்படும் பாஸ் வைத்திருக்க வேண்டும் எனக் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மன்னார் மாவட்ட மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் போது பாஸ் கொண்டு செல்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதோடு, மீனவர்கள் தொடர்ச்சியாகச் சோதனைக்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, மீனவர்கள் பாஸைக் கொண்டுசெல்வது கட்டாயம். மேலும் மன்னார் மாவட்டத்தில் பொலிஸாரின் விசேட நடவடிக்கைகள் நேற்று அதிகரிக்கப்பட்டன. குறிப்பாக முகக்கவசம் அணியாமல் நடமாடுபவர்கள், சுகாதார நடை முறைகளை பின்பற்றாதவர்கள், போக்குவரத்து நடைமுறைகளைப் பேணாதவர்கள் ஆகியோருக்கு கடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

வர்த்தக நிலையங்கள் அத்தியாவசியப் பொருள்களை களஞ்சியப்படுத்தி வைத்திருக்க வேண்டும் எனவும், தேவைப்படும் பட்சத்தில் வீடுகளுக்குக் கொண்டு சென்று வழங்கக்கூடிய வகையிலும், கிராமங்களில் நடமாடும் சேவைகளை மேற்கொள்ளும் வகையிலும் நாங்கள் கலந்துரையாடி அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளோம்.

வங்கி நிர்வாகம் தமது வங்கிகளுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு உரிய விதத்தில் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்றும் அவர்களுக்கான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம். அதே போன்று மன்னார் மாவட்டத்தில் உள்ள வியாபார நிலையங்களிலும் மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்த்து, அவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொருள்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாங்கள் எவ்வாறான நடவடிக்கைகளையும் மேற்கொண்டாலும் மக்களுடைய முழுமையான ஒத்துழைப்பு இல்லை என்றால் நாங்கள் இந்த அபாயத்திலிருந்து எங்களைப் பாதுகாத்துக் கொள்வது பாரிய சவாலாக இருக்கும்.

ஒவ்வொரு தனி நபர்களும் தனதும், தனது குடும்பத்தினதும், சமூகத்தினதும், நாட்டினதும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் இடம்பெற்று வருகின்ற அபாயகரமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு எமது மாவட்டத்தில் இவ்வாறான சம்பவம் ஏற்படாத விதத்தில் அனைவரும் இணைந்து சுகாதார நடை முறைகளை உரிய முறையில் பின்பற்றி மாவட்ட மக்களையும், மாவட்டத்தையும் பாதுகாக்க முன் வர வேண்டும் என அனைவரிடமும் கோரி நிற்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உயிரிழந்த நிலையில் ஒருவர் காலி வீதியில் சடலமாக மீட்பு

மொறட்டுவை புதிய காலி வீதியில் நடைபாதையில் 50 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மொறட்டுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நடைபாதையில் ஒருவர் விழுந்து கிடக்கின்றமையைக் கண்ட பிரதேசவாசிகள் சுவசெரிய அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து அதன் ஊழியர்கள் விழுந்து கிடந்த நபரை பரிசோதித்த போது அவர் உயிரிழந்திருக்கின்றமை தெரியவந்துள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர் யார் என்பது தொடர்பான தகவல்கள் தெரியவரவில்லை. இந்த நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பாணந்துறை வைத்தியசாலையின் பிணவறைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இறந்த நபர் கொவிட் தொற்றாளியா என்பதைக் கண்டறிய பி.சி.ஆர். பரிசோதனையும் நடத்தப்படவுள்ளது.

# ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூருக்கான விமான சேவைகளை இடைநிறுத்தவில்லை

ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூருக்கான அனைத்து சரக்கு மற்றும் பயணிகள் விமான சேவைகள் இலங்கையால் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை இதனை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என அந்த சபை விளக்கமளித்துள்ளது.

# சட்டமா அதிபரின் பதவிக்காலம் 24 ஆம் திகதி முடிவுக்கு வருகிறது



சட்டமா அதிபர் டபுல்ல டி லிவேரா வின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜெயரட்னவின் பணிகள் முடிவுக்கு வருகின்றன.

எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் அவரின் பணிக்காலம் நிறைவுக்கு வருகிறது.

இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட உதவி சட்ட மா அதிபர் விக்கும் டீ ஆப்ரு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே சட்டமா அதிபர் லிவேராவுக்கு கனடாவுக்கான உயர்ஸ்தானிகர் பதவி பரிந்துரைக்கப்பட்டமையும் அதனை அவர் நிராகரித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில்

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் இலங்கையர்கள் உட்பட அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய சுகாதார வழிகாட்டலின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# உலக யோகா போட்டியில் இலங்கை சாதனை இரண்டு பதக்கங்களை வென்றார் ராஜ்குமார்

அகில உலக யோகா சம்மேளனம் நடத்திய, யோகா போட்டியில் இரண்டு பதக்கங்களை வென்று யாழ் யோகா உலகம் சாதனை படைத்துள்ளது.

அகில உலக யோகா சம்மேளனம், அகில உலக யோகா வெற்றியாளர் 2021ஆம் ஆண்டுக்கான போட்டி கடந்த மாத இறுதிப் பகுதியில் இணைய வழியில் நடத்தியிருந்தது.



இப்போட்டியில் யாழ் யோகா உலகம் அமைப்பு சார்பாக கணேசமூர்த்தி ராஜ்குமார் வெவ்வேறு இரு யோகா போட்டிகளில், போட்டியிட்டு முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்று தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை வென்றுள்ளார். 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் வளையுந்தன்மையுடைய ஆசன பிரிவிலும் விசேட ஆசன பிரிவிலுமே இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது.

அமைப்பின் நிறுவுநரும் யோகா போதனாசிரியருமாகிய எஸ். உமாசுதன் போட்டியில் வெற்றியீட்டும் வகையில் சாதனையாளனுக்கு யோகா பயிற்சிகள் நுணுக்கமாக வழங்கப்பட்டதோடு நுட்பங்களும் பயிற்றுவிக்கப்பட்டன.

யோகா வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் பிரத்தியேகமான இடமொன்றில் இவருக்கென தனியான யோகா பயிற்சிகள் வழங்கப்பட்ட நிலையில் சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினாவைத் தளமாகக் கொண்டியங்கும் யோகா சம்மேளனத்தின் யோகா வெற்றியாளர் நிகழ்வில் இலங்கை, இந்தியா மற்றும் மலேசியா உள்ளிட்ட பல நாடுகள் பங்குபற்றியிருந்தன. இதன் முடிவுகள் மே மாதம் 8 ஆம் திகதி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இராஜாங்க அமைச்சரின் இணைப்பு செயலர் பயணித்த வாகனம் மட்டக்களப்பில் விபத்து


இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் இணைப்பு செயலாளர் பயணித்த வாகனம் செங்கலடி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும், வாகனத்தை செலுத்தி வந்த சாரதி மற்றும் வாகனத்தில் இருந்தவர்கள் அனைவரும் தப்பிச் சென்றுள்ளனர் என அந்த பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த வாகனத்தில் பயணித்தவர்கள் மது போதையில் இருந்தனர் எனவும் பொது மக்கள் கூறியுள்ளனர். இதன் போது வாகனத்தின் இலக்கத் தகட்டை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், பொது மக்களின் எதிர்ப்பை அடுத்து அந்த நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.








# புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் 7 பேருக்குக் கொரோனா

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 7 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இயங்கி வருகின்ற ஆடைத் தொழிற்சாலையில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்து முகாமைத்துவம் செய்கின்ற அதிகாரிகள் சுமார் 30 பேர் வரையில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள் தற்போது நாட்டில் உள்ள நடைமுறைகளுக்கு அமைய வெளிமாவட்டங்களில் இருந்து வருகைதந்தாலும் தனிமைப்படுத்தல் செயற்பாடின்றி நேரடியாக கடமையாற்றி வரும் நிலையில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரத் துறையினர் இவர்களில் 10 பேருக்கு எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது அவர்களில் 6 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலே குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் சாதாரணப் பணியாளர் ஒருவர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் முகாமைத்துவ ஊழியர்கள் மாத்திரமன்றி பணியாளர்களுக்கும் கொவிட் பரவியுள்ள ஒரு நிலைமை உருவாகியுள்ளது.

எனவே, இந்த ஆடை தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களுடன் தொடர்புடையவர்கள், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பேணுவதோடு, கொவிட் தொற்று அறிகுறிகள் அவர்களிடம் காணப் பட்டால் அவர்கள் உடனடியாக சுகாதாரப் பிரிவினரை நாடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட முள்ளியவளை, கணுக்கேணி பகுதியில் ஒருவருக்கும், முல்லைத்தீவு கள்ளப்பாடு தெற்கில் ஒருவருக்கும் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## சிறுநீரகம் தேவை

32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A- அல்லது O+ அல்லது O- Group வகையைச் சேர்ந்த சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக் கூடியவர் தொடர்பு கொள்ளவும். தகுதி உடையவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- SANJU
076 531 4995
075 576 0264










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.05.2021 இல் வெளியிடப்பெற்றது.